# நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

2025–ஆம் ஆண்டு மே 12–ம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

நகராட்சி அலுவலகம்,
நந்திவரம் – கூடுவாஞ்சேரி
நாள்: 12.05.2025

**நகர்மன்றதலைவர்**
**நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி**

---

**பொருள் எண்.1**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4928/2024/அ3, நாள்.29.03.2025–ன் படி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024–25 ஆம் ஆண்டின் கீழ் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் நவீன பேருந்து நிழற்குடை அமைத்தல் பணி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**ந.க.எண்.777/2025/இ1**
**தீர்மானம் எண்.57 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.2**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்ட சிறுபாலங்களுக்கு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9 சிற்பி நகர் முதல் சிங்காரம் நகர் வரை சிறுபாலம் அமைத்தல் பணி. | 150.00 |
| 2. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8 அருள் நகர் முதல் காமாட்சி நகர் வரை சிறுபாலம் அமைத்தல் பணி. | 250.00 |
| 3. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 அருள் நகர் முதல் மீனாட்சி நகர் வரை சிறுபாலம் அமைத்தல் பணி. | 150.00 |

மேற்படி மூன்று பகுதிகளில் சிறுபாலங்கள் அமைக்க மண் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை வழங்குவதற்கு ரூ.1.60 இலட்சத்திற்கு விலைப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2025–26 – ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**
**தீர்மானம் எண்.58 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.3**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கும் குடிநீர் லாரி வாகன எண்:–TN 19 K 9756-இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கு உத்தேச செலவின தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை குடிநீர் நிதி 2025–26-ஆம் ஆண்டின் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்:542/2024/இ1**
**தீர்மானம் எண்.59 – மன்றம் அனுமதி அளிக்கிறது**
**பொருள் எண்.4**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–23–ஆம் ஆண்டின் கீழ் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட நெல்லிக்குப்பம் சாலையில் அறிவுசார் நூலக மையம் கட்டிடம் கட்டுதல் பணி தற்போது நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிடத்தினை சுற்றி பொதுமக்களின் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்துக்கு நெரிசல் ஏற்பட்டு அப்பகுதியில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதால் அவ்விடத்தில் சுற்றுச்சுவர் அமைப்பது அவசியமாகிறது. எனவே இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நெல்லிக்குப்பம் சாலை அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி எதிரில் உள்ள அறிவுசார் நூலக மையம் கட்டிடத்தினை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்தல் பணி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2025–26 ஆம் ஆண்டின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண்.60 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.5**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30 சீயோன் நகர் பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரக்குடில் மையம் அருகில் இரும்பு தகர தடுப்பு வேலி (Galvanised Zinc Sheet Fencing ) அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொது நிதி 2025–26–ன் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 777/2025/இ1**

**தீர்மானம் எண்.61 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.6**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்10–ல் மணிமேகலை தெரு, திருவள்ளுவர் தெரு, செங்குட்டுவன் தெரு, திரு.வி.க தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் பைப்லைன் அமைத்தல் பணி குடிநீர் நிதி 2025–26–ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.54, நாள்.28.03.2025–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 17.04.2025 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | வார்டு எண்10–ல் மணிமேகலை தெரு, திருவள்ளுவர் தெரு, செங்குட்டுவன் தெரு, திரு.வி.க தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் பைப்லைன் அமைத்தல் பணி. | 10.00 | திருவா.குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் | - | 0.03% |
| | | | திருவா.ஜே.பி.எஸ் எண்டர்பிரைசஸ் | 3.43% | - |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.03 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவா.குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண்.62 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.7**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.03 ஜெயராம் நகர் பகுதியில் பூங்கா (சர்வே எண்.427/18 ) வளர்ச்சி பணி ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் 2025–26 ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள 18 & 19 வது கூட்ட அறிக்கையில் ($18^{th}$ & $19^{th}$ Common Project Sanctioning and Monitoring Committee) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண்.63 – மன்றம் அனுமதி அளிக்கிறது**
**பொருள் எண்.8**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட நந்திவரம் தாங்கலை சுற்றி கம்பத்தில் உள்ள மின்விளக்குகளை பழுது பார்த்தால், 1700 மீட்டருக்கு 4 Core 25 sq.mm மின்சார கேபி,ள் மகாலட்சுமி நகர் விரிவு–7 பூங்கா உள்ள மின்விளக்குகளை பழுது பார்த்தால், நெல்லிக்குப்பம் சாலை சந்திப்பில் உள்ள உயிர் கோபுர விளக்கு பழுது பார்த்தால் மற்றும் தெரு மின் விளக்குக்கு தேவைப்படும் சுவிட்ச், எம்.சி.பி இதர பணிகள் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2025–26–ஆம் ஆண்டின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2025–26–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண்.64 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.9**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (விடுபட்ட) 70 Watts LED விளக்குகள் 40 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல் பணி ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.266, நாள்.20.12.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 20.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (விடுபட்ட) 70 Watts LED விளக்குகள் 40 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல் பணி. | 3.00 | ஸ்ரீ ஸ்ரீனிவாச எலக்ட்ரிக்கல்ஸ் | - | 0.08% |
| | | | வசந்த குமார் & கோ | 2.72% | - |

**அலுவலக குறிப்பு:** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திருவா. ஸ்ரீ ஸ்ரீனிவாச எலக்ட்ரிக்கல்ஸ்** என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 777/2024/இ1**

**தீர்மானம் எண்.65 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.10**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட நெல்லிக்குப்பம் சாலை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் 9 மீட்டர் நீளம் கொண்ட கம்பத்துடன் கூடிய 150 Watts LED மின்விளக்குகள் அமைத்தல் பணி ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2024–2025–ன் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.262, நாள்.20.12.2024–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி

வழங்கப்பட்டதை தொடர்ந்து 20.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட நெல்லிக்குப்பம் சாலை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் 9 மீட்டர் நீளம் கொண்ட கம்பத்துடன் கூடிய 150 Watts LED மின்விளக்குகள் அமைத்தல் பணி. | 6.00 | ஸ்ரீ ஸ்ரீனிவாச எலக்ட்ரிக்கல்ஸ் | - | 0.05% |
| | | | வசந்த குமார் & கோ | 3.53% | - |

**அலுவலக குறிப்பு:** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திருவா. ஸ்ரீ ஸ்ரீனிவாச எலக்ட்ரிக்கல்ஸ்** என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 777/2024/இ1**

**தீர்மானம் எண்.66 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.11**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள குளிர் சாதன பெட்டிகளை பழுது பார்த்தால் பணி மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.35000/– ற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொது நிதி 2025–26–ன் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 777/2025/இ1**

**தீர்மானம் எண்.67 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.12**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் அரசு தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் (ஏப்ரல் 2025 முதல் செப்டம்பர் 2025 வரை) ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2025–26–ன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 27.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் /நிறுவனம் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் அரசு தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிப்பு மற்றும் தூய்மை பணிகள் (ஏப்ரல் 2025 முதல் செப்டம்பர் 2025 வரை). | ரூ.12.00 | M/s.Perfect Service System | – | 0.37% |
| | | | M/s.Willing Service System | 4.40% | – |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.18% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Perfect Service System என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1880/2024/எச்1**

**தீர்மானம் எண்.68 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.13**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு வெளிக்கொணர்வு (Out Sourcing) மூலம் DBC பணியாளர்களைக் கொண்டு குடியிருப்புகள் கணக்கீடு செய்யும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2025–26–ன் கீழ் மேற்கொள்ள படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 27.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் /நிறுவனம் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு வெளிக்கொணர்வு (Out Sourcing) மூலம் DBC பணியாளர்களைக் கொண்டு குடியிருப்புகள் கணக்கீடு செய்யும் பணி (ஏப்ரல் 2025 முதல் மே 2025 வரை). | ரூ.25.00 | M/s.Perfect Service System | – | 0.18% |
| | | | M/s.Willing Service System | 2.65% | – |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.18% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Perfect Service System என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1881/2024/எச்1**

**தீர்மானம் எண்.69 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.14**

தமிழக சட்டப்பேரவையில் மார்ச் 14 ஆம் தேதியில் தாக்கல் செய்யப்படவுள்ள 2025–26 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் காணொளியினை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் இரண்டு நாட்களுக்கு பொதுமக்களுக்கு நேரடி ஒளிபரப்பு செய்ய LED Screen ,சியாமியான பந்தல் மற்றும் நாற்காலிகள் வாடகை அடிப்படையில் 14.03.2025 மற்றும் 15.03.2025 ஆகிய நாட்களில் சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.1.75/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொது நிதி 2025–26–ன் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 777/2025/இ1**

**தீர்மானம் எண்.70 – மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது**

**பொருள் எண்.15**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் 2025–2026 ஆம் ஆண்டிற்கான (ஒரு வருடத்திற்கு) AMC பராமரிப்பு பணிகள் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி 2025 – 2026–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொது நிதி 2025–26–ன் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 777/2025/இ1**

**தீர்மானம் எண்.71 – மன்றம் அனுமதிக்கிறது**

**பொருள் எண்.16**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு அலுவலகத்திற்கு ஒரு எண்ணிக்கையில் உயர்ரக பிரிண்டர் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி மூலம் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொது நிதி 2025–26–ன் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 376/2025/இ**

**தீர்மானம் எண்.72 – மன்றம் அனுமதிக்கிறது**

**பொருள் எண்.17**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கும் குடிநீர் லாரி வாகன எண்:–TN 19 K 9756-இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெறும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 14.03.2025 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | பணிகள் விவரம் | திருவா.M.S.Body Works | திருவா. Jayasakthi Body Works | திருவா. Sakthi Body Works |
|---|---|---|---|---|
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கும் குடிநீர் லாரி வாகன எண்:–TN 19 K 9756-இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று பெறும் பணி. | ரூ.326742.00 | ரூ.345507.00 | ரூ.335238.00 |

**அலுவலக குறிப்பு:-**மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.326742/– என குறைந்த தொகைக்கு பணி மேற்கொள்ள விலைப்புள்ளி வழங்கிய திருவா.M.S.Body Works என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.73 – மன்றம் அனுமதிக்கிறது**

**பொருள் எண்.18**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2135/2012/ஆ1, நாள்.14.02.2025–ன் படி அனுமதி வழங்கப்பட்டதற்கிணங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் பழைய அலுவலக பதிவறையில் உள்ள அனைத்து கோப்புகளையும் புதிய அலுவலகத்திற்கு கொண்டு வந்து கோப்புகளை சுத்தம் செய்து அடுக்கி வைக்கும் பணி மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.1.80/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொது நிதி 2025–26–ன் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 0454/2025/இ1**

**தீர்மானம் எண்.74 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.19**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்ட சிறுபாலங்களில் மண் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை வழங்கும் பணிகள் மேற்கொள்ள 08.04.2025 அன்று மூடி முத்திரையிடப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளிகள் | | |
|---|---|---|---|---|
| | | M/s. R & B Projects | M/s. New Chennai CADS | M/s. Glency Docmra Consultants India Pvt Ltd |
| 1 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஃபெங்கல் புயலால் பாதிக்கப்பட்ட சிறுபாலங்களில் மண் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை வழங்கும் பணி. | ரூ.153400/– | ரூ.177000/– | ரூ.171100/– |

**அலுவலக குறிப்பு :-**இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று **M/s. R & B Projects**, சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.75 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.20**

மாவட்ட ஆட்சித்தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செங்கல்பட்டு அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4928/2024/அ3, நாள்.29.03.2025–ன் படி பாராளுமன்ற

உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024–25 ஆம் ஆண்டின் கீழ் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் நவீன பேருந்து நிழற்குடை அமைத்தல் பணி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 17.04.2025 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் நவீன பேருந்து நிழற்குடை அமைத்தல் பணி. | 20.00 | திரு.எல்.வெங்கடேசன் | - | 0.02% |
| | | | திரு.எல்.புண்ணியக்கோட்டி | 3.75% | - |

**அலுவலக குறிப்பு:** மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02% குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எல்.வெங்கடேசன் என்பவருக்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2025/இ1**

**தீர்மானம் எண்.76 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.21**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.9730/2025/SS1, நாள்.02.04.2025–ன் படி நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு 2025–26 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (TURIP) கீழ் ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் 8 சிப்பங்களாக தார்சாலைப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | சிப்பம் | பணியின் விவரம் | நீளம் (கி.மீ) | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 1 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜெயலட்சுமி நகர் 1வது தெரு வடக்கு பக்கம் 2–வது குறுக்கு 178006R117, ஜெயலட்சுமி நகர் 1–வது தெரு 178006R108, அமுதம் காலனி விரிவு 178006R133, ஜெயலட்சுமி நகர் 2–வது தெரு 178006R109, கணேஷ் நகர் 178006R119, அமுதம் காலனி 1–வது தெரு 178006R124, அமுதம் காலனி பூங்கா தெரு 178006R125, ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை 2–வது தெரு 178006R147, ஜெயலட்சுமி நகர் 3–வது தெரு 178006R110, ஜெயலட்சுமி நகர் 1–வது தெரு வடக்கு பக்கம் 1–வது குறுக்கு 178006R116, ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை 3–வது தெரு 178006R148, அபே அவென்யூ 1 – வது தெரு 178006R149 ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை 178006R145 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 1.300 | 65.50 |
| 2. | 2 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட சிவா அவென்யூ 1–வது தெரு 178006R135, சிவா அவென்யூ 4–வது தெரு 178006R138, சிவா அவென்யூ 5–வது தெரு 178006R139, ஐஸ்வர்யா நகர் 2–வது தெரு 178006R142, சிவா அவென்யூ 1–வது தெரு 178006R335, ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை 1–வது தெரு 178006R346, சிவா அவென்யூ, 178006R134, மகாலட்சுமி நகர் விரிவு–2 பிரதான சாலை 178006R189, ஜெயலட்சுமி நகர் 3–வது தெரு 178006R210 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 0.575 | 27.60 |
| 3. | 3 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட உதயசூரியன் நகர் பிரதான சாலையில் இருந்து (ஜி.எஸ்.டி சாலை) 178006R181, மகாலட்சுமி நகர் விரிவு – 3 பிரதான சாலை 178006R193, உதயசூரியன் நகர் 1 – வது தெரு குறுக்கு தெரு 178006R184, மகாலட்சுமி நகர் விரிவு – 4 பிரதான சாலை 178006R199, மகாலட்சுமி நகர் விரிவு–5 3வது தெரு 178006R105, மகாலட்சுமி நகர் விரிவு–5 4வது தெரு 178006R106 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 0.660 | 33.00 |
| 4. | 4 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரிய தெருவில் 178013S458 தார் சாலை புதுப்பித்தல் பணி. | 0.392 | 22.00 |
| 5. | 5 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார் ராமசாமி தெருவில் 178015R479 தார் சாலை புதுப்பித்தல் பணி. | 0.496 | 27.70 |
| 6. | 6 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட அன்னை தெரசா தெரு 178001R003, அருள் நகர் 178001R005, எம்.ஜி. நகர் 178001R008, பத்மாவதி நகர் II 1 – வது தெரு 178001R020, நீலன் பள்ளி 1–வது தெரு 178001R019, அருள் நகர் பிருந்தாவனம் தெரு 178001R014, அருள் நகர் 8வது தெரு 178001R024, ஏ.பி.ஜெ, அப்துல் கலாம் தெரு 178001R064, அருள் நகர் 5–வது தெரு 178001R012, அருள் நகர் நெய்தல் தெரு 178001R015, நீலன் பள்ளி மெயின் ரோடு 178001R018 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 1.598 | 86.70 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | 7 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட மீனாட்சி நகர் 178001R058, சோழன் தெரு, அருள் நகர் 178001R029, திருவள்ளுவர் தெரு எம்.ஜி. நகர் 178001R034, திருஞான சம்பந்தர் 3–வது தெரு 178001R035, திருஞான சம்பந்தர் 1–வது தெரு 178001R036, தன்வந்தரி 2–வது தெரு 178001R044, மீனாட்சி நகர் 178001R056, மீனாட்சி நகர் 178001R057, திருஞான சம்பந்தர் 2–வது தெரு 178001R037, மாணிக்கவாசகர் 1–வது தெரு 178001R038, காளிதாசன் தெரு 178001R033, மாணிக்கவாசகர் 2–வது தெரு 178001R039, பாண்டிய மன்னன் தெரு 178001R030, வள்ளலார் தெரு எம்.ஜி. நகர் 178001R042, தன்வந்தரி 1–வது தெரு 178001R045 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 1.532 | 82.60 |
| 8. | 8 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பிரபு அவென்யூ பிரதான சாலை 178002R085, செல்வ வினாயகர் கோயில் தெரு 178002R086, கல்பனா சாவ்லா 1–வது தெரு 178002R067, ராகவேந்திரா நகர் பிரதான சாலை 178002R071, செல்வ வினாயகர் கோயில் தெரு பிரபு அவென்யூ 178002R100, ஐயப்பன் விடுதி யமுனா நகர் 178002R092 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 0.667 | 33.00 |
| | | **மொத்தம்** | **7.220** | **378.10** |

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**ந.க.எண்.0667/2025/இ1**
**தீர்மானம் எண்.77 – மன்றம் அனுமதி வழங்குகிறது**

**பொருள் எண்.22**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1042/2023/ஆ1, நாள்.26.03.2025–ன் படி 15 வது நிதிக்குழு மானியம் Health Grant 2024 –25–ன் கீழ் நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் உள்புறம் சுகாதார அலகு கட்டிடம் அமைத்தல் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 16.04.2025 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு:–

| வ. எ ண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் உள்புறம் சுகாதார அலகு கட்டிடம் அமைத்தல் பணி. | 50.00 | திருவா. ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்சன் | - | 0.04% |
| | | | திரு.எல்.வெங்கடேசன் | 3.48% | - |

**அலுவலக குறிப்பு:** மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.04% குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவா. ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்சன் என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1211/2024/இ1**

**தீர்மானம் எண்.78 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.23**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2135/2012/ஆ1, நாள்.14.02.2025–ன் படி அனுமதி வழங்கப்பட்டதற்கிணங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் பழைய அலுவலக பதிவறையில் உள்ள அனைத்து கோப்புகளையும் புதிய அலுவலகத்திற்கு கொண்டு வந்து கோப்புகளை சுத்தம் செய்து அடுக்கி வைக்கும் பணிகள் ரூ.1.80/– இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 04.04.2025 அன்று மூடி முத்திரையிடப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளிகள் | | |
|---|---|---|---|---|
| | | திருவா.ரமணி எண்டர்பிரைசஸ் | திருவா . ஸ்ரீ குஹன் சிவில் கன்ஸ்ட்ரக்சன் | திரு.எல்.வெங்கடேசன் |
| 1 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் பழைய அலுவலக பதிவறையில் உள்ள அனைத்து கோப்புகளையும் புதிய அலுவலகத்திற்கு கொண்டு வந்து கோப்புகளை சுத்தம் செய்து அடுக்கி வைக்கும் பணி. | ரூ.180000/– | ரூ.210000/– | ரூ.200000/– |

**அலுவலக குறிப்பு:-**மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.180000/– என குறைந்த தொகைக்கு பணி மேற்கொள்ள விலைப்புள்ளி வழங்கிய திருவா.ரமணி எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண். 0454/2025/இ1**

**தீர்மானம் எண்.79 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.24**

தமிழக சட்டப்பேரவையில் மார்ச் 14 ஆம் தேதியில் தாக்கல் செய்யப்படவுள்ள 2025–26 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் காணொளியினை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் இரண்டு நாட்களுக்கு பொதுமக்களுக்கு நேரடி ஒளிபரப்பு செய்ய LED Screen ,சியாமியான பந்தல் மற்றும் நாற்காலிகள் வாடகை அடிப்படையில் 14.03.2025 மற்றும் 15.03.2025 ஆகிய நாட்களில் சப்ளை செய்யும் பணி ரூ.1.75/– இலட்சத்திற்கு மேற்கொள்ள 13.03.2025 அன்று மூடி முத்திரையிடப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | பணியின் விவரம் | விலைப்புள்ளிகள் |
|---|---|---|

| வ.எண் | | திருவா.ரமணி எண்டர்பிரைசஸ் | திருவா.Jayshun Associates | திருவா. ஜே.பி.எஸ் எண்டர்பிரைசஸ் |
|---|---|---|---|---|
| 1 | தமிழக சட்டப்பேரவையில் மார்ச் 14 ஆம் தேதியில் தாக்கல் செய்யப்படவுள்ள 2025–26 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் காணொளியினை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் இரண்டு நாட்களுக்கு பொதுமக்களுக்கு நேரடி ஒளிபரப்பு செய்ய LED Screen ,சியாமியான பந்தல் மற்றும் நாற்காலிகள் வாடகை அடிப்படையில் 14.03.2025 மற்றும் 15.03.2025 ஆகிய நாட்களில் சப்ளை செய்யும் பணி. | ரூ.175000/– | ரூ.180000/– | ரூ.200000/– |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.175000/– என குறைந்த தொகைக்கு பணி மேற்கொள்ள விலைப்புள்ளி வழங்கிய திருவா.ரமணி எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண். 777/2025/இ1**

**<u>தீர்மானம் எண்.80 – மன்றம் அனுமதி அளிக்கிறது</u>**

**பொருள் எண்.25**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள இருக்கை எழுத்தர்களுக்கு நிலைப்பேழை (Steel Bero) 15 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள உத்தேச செலவின தொகை ரூ.2.50/– இலட்சத்திற்கு பொது நிதி 2025–26–ன் கீழ் விலைப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணியினை பொது நிதி 2025–26–ன் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 777/2025/இ1**

**<u>தீர்மானம் எண்.81 – மன்றம் அனுமதி அளிக்கிறது</u>**

**பொருள் எண்.26**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள குளிர் சாதன பெட்டிகளை பழுது பார்த்தால் பணி ரூ.35000/– ற்கு மேற்கொள்ள 11.04.2025 அன்று மூடி முத்திரையிடப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| | பணியின் விவரம் | விலைப்புள்ளிகள் |
|---|---|---|

| வ.எண் | | திருவா.Jayshun Associates | திருவா.ரமணி எண்டர்பிரைசஸ் | திருவா.குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் |
|---|---|---|---|---|
| 1 | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள குளிர் சாதன பெட்டிகளை பழுது பார்த்தால் பணி. | ரூ.35000/– | ரூ.40000/– | ரூ.37000/– |

**அலுவலக குறிப்பு:-**மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.35000/– என குறைந்த தொகைக்கு பணி மேற்கொள்ள விலைப்புள்ளி வழங்கிய திருவா.Jayshun Associates என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண். 777/2025/இ1**

**தீர்மானம் எண்.82 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.27**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி பகுதியில் தினசரி மட்கும் குப்பைகள் 13.014 மெட்ரிக் டன் மற்றும் 15.906 மட்காத குப்பைகள் மொத்தம் 28.92 மெ.டன் குப்பைகள் உருவாகின்றன இந்நகராட்சியில் குப்பை கிடங்கு இல்லாத காரணத்தினால் இரண்டாம் நிலை சேகரிப்பு பணி கூட மேற்கொள்ள சிரமமான சூழல் உள்ளது 13.014 மெ.டன் மட்கும் குப்பைகளில் 5 மெ.டன் அளவுள்ள நுண்ணுர குடில் பகுதியில் செயலாக்கம் செய்ய கூடிய அளவில் உள்ளது மீதமுள்ள குப்பைகளை தேக்கமடையாமல் பொது சுகாதாரக் கேடு ஏற்படாமல் பாரிவாக்கம் ஸ்ரீ பத்மாவதி என்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு அனுப்புவதற்கு டாராஸ் வாகனம் மற்றும் JCB இயந்திரம் வாடகை அடிப்படையில் ஜூன் 2025 முதல் ஜூலை 2025 வரை உள்ள காலத்திற்கு அமர்த்திடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.83 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.28**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு அலுவலகத்திற்கு ஒரு எண்ணிக்கையில் உயர்ரக பிரிண்டர் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி மூலம் விநியோகம் செய்யும் பணிகள் மேற்கொள்ள 11.04.2025 அன்று மூடி முத்திரையிடப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளிகள் | | |
|---|---|---|---|---|
| | | M/s.MH SUPER COMPUTERS | M/s.NEW ELECTRONICS | M/s.RR INFOTECH |
| 1 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,செங்கல்பட்டு அலுவலகத்திற்கு ஒரு எண்ணிக்கையில் உயர்ரக பிரிண்டர் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி மூலம் விநியோகம் செய்யும் பணி. | ரூ.458000/– | ரூ.458450/– | ரூ.459300/– |

**அலுவலக குறிப்பு :-**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.**458000/–** என குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s. MH SUPER COMPUTERS** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**ந.க.எண். 376/2025/இ1**

**தீர்மானம் எண்.84 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.29**

நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை பாரிவாக்கம் ஸ்ரீ பத்மாவதி எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு எடுத்து செல்வதற்காக கனரக வாகனம் டாரஸ் டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி, டிரைவர் பேட்டா உட்பட நடை ஒன்றுக்கு) மற்றும் ஜே.சி.பி வாகனம் சப்ளை செய்தல் பணிக்கு (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு மணி நேரத்திற்கு) ரூ.**20.00** இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி **2025–26**–ன் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து **27.03.2025** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் /நிறுவனம் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | நந்திவரம்–கூடுவாஞ்சேரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை பாரிவாக்கம் ஸ்ரீ பத்மாவதி எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு எடுத்து செல்வதற்காக கனரக வாகனம் டாரஸ் டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி, டிரைவர் பேட்டா உட்பட நடை ஒன்றுக்கு) மற்றும் ஜே.சி.பி வாகனம் சப்ளை செய்தல் பணிக்கு (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு மணி நேரத்திற்கு) ஏப்ரல் 2025 முதல் மே 2025 வரை). | ரூ.20.00 | M/s. Om Sakthi Enterprises | – | 0.47% |
| | | | M/s. Ameamu Enterprises | 3.77% | – |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.50%** குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Om Sakthi Enterprises என்ற நிறுவனத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1883/2024/எச்1**

**தீர்மானம் எண்.85 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.30**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 2025–2026 ஆம் ஆண்டில் DBC பணியாளர்களை கொண்டு குடியிருப்புகள் கணக்கீடு செய்யப்பட்ட விபரப்படி 17954 குடியிருப்புகள் உள்ளன. இதற்கு PLAN – 300 திட்டத்தின் படி 60 பணியாளர்கள் தேவை.

இந்நகராட்சியில் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளதால், மேற்படி பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களின் ஊதிய அளவுகோலின்படி வெளிக்கொணர்வு மூலம் (Out Sourcing) ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் DBC மஸ்தூர் பணியாளர்களுக்கான மாவட்ட ஆட்சியரின் ஊதிய அளவு கோலின்படி ஒரு நபருக்கு ரூ.573/– வீதம் இதர செலவினங்களுடன் சேர்த்து ஜுன் 2025 முதல் ஜுலை 2025 வரை உள்ள காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.25.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.86 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.31**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய்,பேவர் பிளாக் பணிகள் பொது நிதி 2025–26–ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.53, நாள்.28.03.2025–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 17.04.2025 அன்று மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு |
| 1. | வார்டு எண்.10–ல் உள்ள மணிமேகலை தெரு பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி. | 25.00 | திருவா.எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.02% |
| | | | திரு.எம்.கே.பாலாஜி | 2.73% | - |
| 2. | வார்டு எண்.10–ல் உள்ள மணிமேகலை தெரு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி. | 20.00 | திருவா.எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.03% |
| | | | திரு.எம்.கே.பாலாஜி | 3.25% | - |

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | அதிகம் |
| 3. | வார்டு எண்.10–ல் உள்ள திரு.வி.க தெரு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி. | 15.00 | திருவா.எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.06% |
| | | | திரு.எம்.கே.பாலாஜி | 3.46% | - |
| 4. | வார்டு எண்.10–ல் உள்ள ராமலிங்கம் தெரு பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி. | 23.00 | திருவா.எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.03% |
| | | | திரு.எம்.கே.பாலாஜி | 2.15% | - |
| 5. | வார்டு எண்.10–ல் உள்ள ராமலிங்கம் தெரு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி. | 20.00 | திருவா.எம்.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்டிங் காண்ட்ராக்டர் | - | 0.05% |
| | | | திரு.எம்.கே.பாலாஜி | 2.88% | - |
| 6. | வார்டு எண்.19–ல் உள்ள ராஜீவ் காந்தி நகர், அம்பேத்கர் தெரு மழைநீர் வடிகால்வாய் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி. | 13.50 | திருவா.குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் | - | 0.07% |
| | | | திருவா.ஜே.பி.எஸ் எண்டர்பிரைசஸ் | 2.75% | - |
| 7. | வார்டு எண்.19–ல் உள்ள ராஜீவ் காந்தி நகர், காமராஜர் தெரு பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி. | 18.00 | திருவா.குமரன் எலெக்ட்ரிக்கல்ஸ் | - | 0.04% |
| | | | திருவா.ஜே.பி.எஸ் எண்டர்பிரைசஸ் | 3.53% | - |

**அலுவலக குறிப்பு:-** மேற்படி வரிசை எண்.1 முதல் 7 வரை உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண்.87 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.32**

செங்கல்பட்டு மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு 11.03.2025 அன்று வருகை தருவதற்காக மாலை மலர் செய்தித்தாளில் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி சார்பில் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்படி செய்தித்தாளில் விளம்பரம் வெளியீடு செய்யப்பட்டதற்கான விளம்பர செலவின தொகை ரூ.5775/–ஐ M/s.Malar Publications Limited என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2025–26 ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று M/s.Malar Publications Limited என்ற நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண்.88 – மன்றம் அனுமதி அளிக்கிறது**
**பொருள் எண்.33**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் மற்றும் விதிகள் 2023–ன்கீழ் நிர்ணயிக்கப்பட்ட படிவங்களை தேவைக்கேற்ப அச்சடித்து சப்ளை செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான மெசர்ஸ்திருநெல்வேலி மாவட்ட மல்டிபர்பஸ் தொழில்கூட்டுறவு நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1326/2024/அ2**
**தீர்மானம் எண்.89 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.34**

செங்கல்பட்டு மாவட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு 11.03.2025 அன்று வருகை தருவதற்கான செய்தித்தாள் விளம்பரம் நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி சார்பில் கீழ்காணும் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது.

| வ.எண் | செய்தித்தாள் பெயர் | செய்தித்தாள் நிறுவனம் | விளம்பர செலவின தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | தினத் தந்தி | THE DAILY THANTHI | ரூ.36666/– |
| 2. | தினகரன் | KAL PUBLICATIONS PRIVATE LIMITED | ரூ.34000/– |
| 3. | மாலை தமிழகம் | MAALAI TAMIZHAGAM | ரூ.18900/– |
| | | **மொத்தம் –** | **ரூ.89566/–** |

மேற்படி செய்தித்தாள்களில் விளம்பரம் வெளியீடு செய்யப்பட்டதற்கான மொத்த விளம்பர செலவின தொகை ரூ.89566/– ஐ அந்தந்த செய்தித்தாள் நிறுவனங்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொது நிதி 2025–26 ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று செய்தித்தாள் நிறுவனங்களுக்கு பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**

**தீர்மானம் எண்.90 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.35**

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி 30 வார்டுகளை கொண்ட முதல் நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி 8.50 சதுர கிலோ மிட்டர் பரப்பளவு கொண்டு 2011–ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 44098 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 96000 ஆகும். மேலும் இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் கால்வாய்கள் தூர்வாரிடவும், திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ளவும் JCB இயந்திரம் கொள்முதல் செய்வது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி பொதுநிதி 2025–26–ஆம் ஆண்டின் கீழ் JCB இயந்திரம்கொள்முதல் செய்தல் பணிக்கு ரூ.37.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதி 2025–2026–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**
**தீர்மானம் எண்.91 – மன்றம் அனுமதி அளிக்கிறது**
**பொருள் எண்.36**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15-ல் உள்ள கூடுவாஞ்சேரி குளத்தில் நடைபாதை, SS HANDRAILS, மின்விளக்குகள், இருக்கைகள், பசுமை மரக்கன்றுகள் அமைத்தல் பணி நடைபெறவுள்ளதால் அக்குளத்தில் புதியதாக மும்முனை மின் இணைப்பு வழங்க ரூ.19520/– ஐ செலுத்த கோரி உதவி மின் பொறியாளர், இயக்குதல் மற்றும் பராமரித்தல், கூடுவாஞ்சேரி நகர் பிரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்கள் மூலம் கேட்பு வழங்கப்பட்டது. எனவே மேற்படி குளத்தில் மும்முனை மின் இணைப்பு வழங்குவதற்கான செலவின தொகை ரூ.19520/–ஐ உதவி மின் பொறியாளர், இயக்குதல் மற்றும் பராமரித்தல், கூடுவாஞ்சேரி நகர் பிரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை பொதுநிதி 2025–2026–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவின தொகையினை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று உதவி மின் பொறியாளர், இயக்குதல் மற்றும் பராமரித்தல், கூடுவாஞ்சேரி நகர் பிரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அவர்களுக்கு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.777/2024/இ1**
**தீர்மானம் எண்.92 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.37**

நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கும் குடிநீர் லாரி வாகன எண்:– TN 19 K 9756-இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து தகுதி சான்று (Fitness Inspection Certificate), (Green Tax), (Road Tax) பெற வட்டார போக்குவரத்து கழகம், செங்கல்பட்டு அவரக்ளுக்கு இணையதளம் வாயிலாக ரூ.35956/– மற்றும் இதர செலவினங்கள் (Speed Governor Certificate), (Stickers Cetrifcate), (Pollution Certificate) ரூ.13900/– என ஆக மொத்தம் ரூ.49856/– தொகை திரு.கே.மணிமாறன் (எம்.எஸ். பாடி ஒர்க்ஸ்) என்பவர் மூலம் செலுத்தப்பட்டது.எனவே மேற்படி பணிக்கு செலுத்தப்பட்ட ரூ.49856/– தொகையினை திரு.கே.மணிமாறன் (எம்.எஸ். பாடி ஒர்க்ஸ்) என்பவருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதி **2025–26**–ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.0624/2025/இ1**

**தீர்மானம் எண்.93 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.38**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – **28** அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**9730/2025/SS1**, நாள்.**02.04.2025**–ன் படி நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு **2025–26** ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (TURIP) கீழ் ரூ.**3.78** கோடி மதிப்பீட்டில் **8** சிப்பங்களாக தார்சாலைப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து **28.04.2025** அன்று மாநில அளவில் மின்னனு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, **30.04.2025** அன்று Price Bid திறக்கப்பட்டு தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டதில் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டுள்ளது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| வ. எண் | சிப்பம் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | அதிகம் | குறைவு | |
| **1.** | **1** | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜெயலட்சுமி நகர் **1**வது தெரு வடக்கு பக்கம் **2**–வது குறுக்கு 178006R117, ஜெயலட்சுமி நகர் **1**–வது தெரு 178006R108, அமுதம் காலனி விரிவு 178006R133, ஜெயலட்சுமி நகர் **2**–வது தெரு 178006R109, கணேஷ் நகர் 178006R119, அமுதம் காலனி **1**–வது தெரு 178006R124, அமுதம் காலனி பூங்கா தெரு 178006R125, ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை **2**–வது தெரு 178006R147, ஜெயலட்சுமி நகர் **3**–வது தெரு 178006R110, ஜெயலட்சுமி நகர் **1**–வது தெரு வடக்கு பக்கம் **1**–வது குறுக்கு 178006R116, ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை **3**–வது தெரு 178006R148, அபே அவென்யூ **1** –வது தெரு 178006R149 ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை 178006R145 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 65.50 | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் | - | 0.06 % | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் |
| | | | | L.புண்ணியகோட்டி | 3.24 % | - | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **2.** | **2** | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட சிவா அவென்யூ **1–**வது தெரு 178006R135, சிவா அவென்யூ **4–**வது தெரு 178006R138, சிவா அவென்யூ **5–**வது தெரு 178006R139, ஐஸ்வர்யா நகர் **2–**வது தெரு 178006R142, சிவா அவென்யூ **1–**வது தெரு 178006R335, ராதாகிருஷ்ணன் நகர் பிரதான சாலை **1–**வது தெரு 178006R346, சிவா அவென்யூ 178006R134, மகாலட்சுமி நகர் விரிவு**–2** பிரதான சாலை 178006R189, ஜெயலட்சுமி நகர் **3–**வது தெரு 178006R210 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 27.60 | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் | - | 0.04 % | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் |
| | | | | T.புண்ணியகோட்டி | 3.28 % | - | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **3.** | **3** | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட உதயசூரியன் நகர் பிரதான சாலையில் இருந்து (ஜி.எஸ்.டி சாலை) 178006R181, மகாலட்சுமி நகர் விரிவு – **3** பிரதான சாலை 178006R193, உதயசூரியன் நகர் **1 –** வது தெரு குறுக்கு தெரு 178006R184, மகாலட்சுமி நகர் விரிவு – **4** பிரதான சாலை 178006R199, மகாலட்சுமி நகர் விரிவு**–5 3**வது தெரு 178006R105, மகாலட்சுமி நகர் விரிவு**–5 4**வது தெரு 178006R106 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 33.00 | M.K.பாலாஜி | - | 0.05 % | M.K.பாலாஜி |
| | | | | M.செல்வராஜ் சிவில் ஒர்க்ஸ் & பில்லடிங் காண்ட்ராக்டர் | 3.02 % | - | |
| **4.** | **4** | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரிய தெருவில் 178013S458 தார் சாலை புதுப்பித்தல் பணி. | 22.00 | L.வெங்கடேசன் | - | 0.02 % | L.வெங்கடேசன் |
| | | | | T.புண்ணியகோட்டி | 2.74 % | - | |
| **5.** | **5** | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார் ராமசாமி தெருவில் 178015R479 தார் சாலை புதுப்பித்தல் பணி. | 27.70 | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் | - | 0.03 % | ஹிதலினியா எண்டர்பிரைசஸ் |
| | | | | T.புண்ணியகோட்டி | 3.23 % | - | |
| **6.** | **6** | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட அன்னை தெரசா தெரு 178001R003, அருள் நகர் 178001R005, எம்.ஜி. நகர் 178001R008, பத்மாவதி நகர் II **1 –** வது தெரு 178001R020, நீலன் | 86.70 | L.வெங்கடேசன் | - | 0.04 % | L.வெங்கடேசன் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பள்ளி 1–வது தெரு 178001R019, அருள் நகர் பிருந்தாவனம் தெரு 178001R014, அருள் நகர் 8வது தெரு 178001R024, ஏ.பி.ஜெ, அப்துல் கலாம் தெரு 178001R064, அருள் நகர் 5–வது தெரு 178001R012, அருள் நகர் நெய்தல் தெரு 178001R015, நீலன் பள்ளி மெயின் ரோடு 178001R018 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | | L.புண்ணியகோட்டி | 2.95 % | - | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **7.** | **7** | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட மீனாட்சி நகர் 178001R058, சோழன் தெரு, அருள் நகர் 178001R029, திருவள்ளுவர் தெரு எம்.ஜி. நகர் 178001R034, திருஞான சம்பந்தர் 3–வது தெரு 178001R035, திருஞான சம்பந்தர் 1–வது தெரு 178001R036, தன்வந்தரி 2–வது தெரு 178001R044, மீனாட்சி நகர் 178001R056, மீனாட்சி நகர் 178001R057, திருஞான சம்பந்தர் 2–வது தெரு 178001R037, மாணிக்கவாசகர் 1–வது தெரு 178001R038, காளிதாசன் தெரு 178001R033, மாணிக்கவாசகர் 2–வது தெரு 178001R039, பாண்டிய மன்னன் தெரு 178001R030, வள்ளலார் தெரு எம்.ஜி. நகர் 178001R042, தன்வந்தரி 1–வது தெரு 178001R045 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 82.60 | L.வெங்கடேசன் | - | 0.04% | L.வெங்கடேசன் |
| | | | | L.புண்ணியகோட்டி | 2.75 % | - | |
| **8.** | **8** | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பிரபு அவென்யூ பிரதான சாலை 178002R085, செல்வ விநாயகர் கோயில் தெரு 178002R086, கல்பனா சாவ்லா 1–வது தெரு 178002R067, ராகவேந்திரா நகர் பிரதான சாலை 178002R071, செல்வ விநாயகர் கோயில் தெரு பிரபு அவென்யூ 178002R100, ஐயப்பன் விடுதி யமுனா நகர் 178002R092 ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் பணி. | 33.00 | VDP அசோக் காண்டிராக்டர் | - | 0.05% | VDP அசோக் காண்டிராக்டர் |
| | | | | L.வெங்கடேசன் | 2.80% | - | |

**அலுவலக குறிப்பு:**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் மற்றும் நிறுவனங்களுக்கு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணியாணை வழங்கிட நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0667/2025/இ1

**தீர்மானம் எண்.94 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.39**

இந்நகராட்சி 2022 – 2023 ஆம் ஆண்டு பொறியியல் பிரிவில் நடைபெற்ற பணிகளுக்காக ஒப்பந்த்தாரர்கள் செலுத்திய வைப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளனர். மேற்படி ஒப்பந்த்தாரர்கள் வழங்க கோரிய வைப்பு தொகைகள் காலங்கடந்தவை என்பதால் கீழ்காணும் பட்டியலில் உள்ள ஒப்பந்த்தாரர்களுக்கு அவர்ரவர் செலுத்திய வைப்பு தொகையினை வழங்க மன்றம் ஒப்புதலுக்கு.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | L. வெங்கடேசன் | 180700.00 |
| 2. | S. தேவராஜ் | 17150.00 |
| 3. | T. ராமச்சந்திரன் | 33100.00 |
| 4. | G. தாராபாய் | 17250.00 |
| 5. | P. எத்திராஜன் | 57300.00 |
| 6. | K. வெங்கடேசலு | 36100.00 |
| 7. | J. ராஜேஸ்வரி | 8000.00 |
| | **மொத்தம்** | **349600.00** |

**தீர்மானம் எண்.95 – மன்றம் அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண்.40**

